# 06 இயேசுவின் தொடக்கக்காலத் திருப்பணியும் நாமும்

உரோமையர்களால், பலஸ்தீனா தேசம் ஆளப்பட்ட காலத்தில் யூதர்கள் பல வழிகளிலும் ஒடுக்கப்பட்டனர். யூதர்கள், பொய்யான குற்றச்சாட்டுகள், அதிக வரி செலுத்துதல் போன்றவற்றால் துன்பப்பட்டனர். திருச்சட்டங்களை சிறப்பாக கற்றிருந்த பரிசேயர், சதுசேயர் அவற்றின் உட்கருத்துக்களைத் தவிர்த்து வெளிப்புற கிரியைகளைப் பின்பற்றும்படி, இம்மக்களை ஆன்மீக ரீதியிலும் வேதனைப்படுத்தினர். ஏழைகள், இடையர், தொழுநோயாளர், அங்கவீனர், பெண்கள், அடிமைகள், சிறுவர்கள் ஆகியோர் ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டனர். ஆகவே இக்கால கட்டம் மேசியாவை எதிர்பார்த்து தவித்த உலகில், இறையரசை கட்டியெழுப்புவதற்கு வந்த இயேசு அப்பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு உகந்த ஒரு காலமாக விளங்கியது. திருமுழுக்கு யோவான் தனது முன்னோடித் திருப்பணியை ஆரம்பித்த நாள் முதல் இயேசுவின் நற்செய்திப் பணியின் பரவலுக்கு வழி ஆரம்பமாகியது.

**வாசிப்போம்:**

*மாற்கு 1: 1-8*
*மத்தேயு 3: 13-17*
*லூக்கா 4:1-4*

*இதோ என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன்; அவர் உமக்காக வழியை ஆயத்தம் செய்வார். பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்; அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள்."*

*மாற்கு 1 : 2-3*

யூதா : அப்பா! மக்கள் கூட்டம் கூட்டமாக யோர்தான் ஆற்றுக்குச் செல்லுகிறார்கள். அங்கு என்ன நடக்கிறது.

யெத்திரோ : அங்கு குருவானவர் சக்கரியாவினதும், எலிசபெத்தினதும் மகன் யோவான், தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறார், வாருங்கள் நாமும் சென்று பார்ப்போம்

யூதா : இவர்களெல்லாரும் நீருக்குள் ஏன் செல்லுகிறார்கள்?



யெத்திரோ : அவர்கள் மனந் திரும்புதலின் அடையாளமாக திருமுழுக்குப் பெறுகின்றனர்.பாவங்கள் கழுவப் படுவதை தண்ணீர் அடையாளப்படுத்துகிறது.

யூதா : அதோ பாருங்கள் அப்பா! இயேசு வும் திருமுழுக்குப் பெற வருகிறார்!

யெத்திரோ : ஆமாம் மகனே, மனம் திரும்பி விடுதலைப் பாதைக்குத் திரும்பிய மக்களுடன் இயேசு தன்னையும் இனம் கண்டு அவர்களோடு தம் உறவைக் கட்டியெழுப்புகிறார். இயேசுவின் தாழ்மையும் நமக்கு முன்னுதாரணமாகிறது.

இயேசுவின் ஆரம்பகாலத் திருப்பணி திருமுழுக்கு யோவானின் திருப்பணியுடன் நெருங்கிய தொடர்புடையது. மனம்மாறி கடவுளுடைய ஆட்சியை ஏற்று முழு வாழ்வு அடையவேண்டும் என இயேசு காட்டினார்.

## இயேசு நற்செய்திப் பணிக்கு ஆயத்தமாகுதல்
## இயேசுவின் சோதனைகள்

***வாசிப்போம்:***
*லூக்கா 4:1-13*

திருமுழுக்குப் பெற்ற வேளையை தமது திருப்பணியின் ஆரம்பமாகக் கொண்ட இயேசு, தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு பாலை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு நாற்பது நாட்கள் உபவாசித்து, செபித்து, கடவுளின் வல்லமையைப் பெற்று அலகையால்

ஏற்பட்ட சோதனைகளை மேற்கொண்டார். இயேசு பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியிலும் கடவுளின் ஆட்சிக்குரிய விழுமியங்களின் படி மாத்திரமே செயல்பட்டார்.

**1ம் சோதனை - லூக்கா 4: 1-4**

பாலை நிலத்தில், பசியுடன் இருந்த இயேசுவின் முன் கற்கள் மாத்திரமே இருந்தன.

**அப்பொழுது அலகை,**

*நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும் படி கட்டளையிடும் என்றது.*

**அதற்கு இயேசு**

*மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாக கடவுளின் வாய்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வார் என மறைநூலில் எழுதியுள்ளதே என்றார்.*



- ஒரு மனிதனின் வாழ்வில் ஏற்படக்கூடிய சோதனைகளில் உடல் தொடர்பான சோதனை முக்கியமானது.
- அலகை, இயேசு பசியுடன் இருப்பதை சாதகமாகப் பயன்படுத்தி கற்களை அப்பமாக மாற்றி உணவாக உண்ண இயேசுவைத் தூண்டியது.
- இயேசு இறைமகனா? என்ற சந்தேகத்தை அலகை ஏற்படுத்தியது.
- ‘கற்களை அப்பமாக்கி உண்பதில் தவறில்லையே என்ற ஒரு சோதனையை அலகை உருவாக்கியது.
- இயேசு புதுமை ஒன்றைச் செய்வதன் மூலம் இறைவனின் சித்தத்தையும், திருப்பணியையும் மீற வைக்க அது எண்ணியது. இயேசுவோ புதுமை செய்யும் நேரம் அல்ல என அறிந்து இச்சோதனையையும், போராட்டத்தையும் மேற்கொள்ள தாம் சிறுவயது முதல் கற்றறிந்த மறைவாக்கியங்களைப் பாவித்து தேவைகளைச் சந்திப்பவர் கடவுள் எனக் காட்டினார்.

### 2ம் சோதனை - லூக்கா 4: 8

அலகை, இயேசுவை மிக உயர்ந்த ஒரு மலைக்குக் கூட்டிச் சென்று உலக அரசுகள் அனைத்தையும், அவற்றின் மேன்மையையும் அவருக்குக் காட்டியது. **அப்போது அலகை**

*"நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையவையாகும்"*

**அதற்கு இயேசு**

*"உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக என்று மறைநூலில் எழுதியுள்ளதே" என்றார்.*



ஆட்சி அதிகார ஆசையினூடாகவும் ஒரு மனிதனுக்குச் சோதனை ஏற்படலாம் என்பதை இச்சோதனை மூலம் நாம் காணலாம். உலக காரியங்களால் மனிதர் அலகைக்கு அடிபணிந்து அதனை அங்கீகரிப்பதன் மூலம் மக்களை இறையரசுக்குள் கொண்டுவர விரும்பவில்லை. மாறாக அவர் சிலுவை மரணத்தை ஏற்றுக்கொள்வது இறை சித்தமாக இருந்தது. நமக்கும் இறை சித்தத்திற்கு மாறான குறுக்கு வழியையும், குறுகிய காலத்தில் பெறக்கூடிய ஆசீர்வாதங்களையும் காட்டி அலகை சோதனைக்குட்படுத்துகிறது. ஆகவே நாமும் திருமறையைப் பயன்படுத்தி அலகையை எதிர்த்து நிற்போம்.

### 3ம் சோதனை - லூக்கா 4:9-13

அலகை, இயேசுவை எருசலேம் கோவிலின் உயர்ந்த பகுதியில் நிறுத்தியது.

**அப்போது அலகை**

*"நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும். உம்மைப் பாதுகாக்கும்படி கடவுள் தம் தூதருக்குக் கட்டளையிடுவார்" என்றும் உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள் என்றும் மறைநூலில் எழுதியுள்ளது"*


**அதற்கு இயேசு**

*"உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம் என்றும் சொல்லியுள்ளதே"*



ஒரு மனிதனுக்கு ஏற்படக்கூடிய மற்றுமோர் சோதனை வாழ்வின் பெருமையாகும். நீர் இறைமகன் தானே உமக்கு ஆபத்து ஏற்படாது என்று இயேசுவை ஒரு வீரனாக நிறுத்தி வஞ்சனை காட்டியது. ஆனால் இங்கும் இயேசு மறைவாக்கைப் பயன்படுத்தி அலகையை வென்றார்.

## கலிலேயாவில் இயேசு பணியை ஆரம்பித்தல்



அலகையால் ஏற்பட்ட சோதனைகளை மேற்கொண்ட இயேசு, தூய ஆவியின் வல்லமை உடையவராக கலிலேயாவுக்கு வந்தார். அங்கு இயேசு தொழுகைக் கூடங்களில் கற்பித்து வந்தார். இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்து தொழுகைக் கூடத்துக்கு ஓய்வுநாளில் சென்றார். அங்கு, இறைவாக்கினர் ஏசாயாவின் சுருளேடு அவரிடம் கொடுக்கப்பட்டது.

**வாசிப்போம்:**
*லூக்கா 4:14-30*

**இயேசு வாசித்த பகுதியானது,**

*ஆண்டவருடைய ஆவி என் மேல் உளது; ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்.*
*லூக்கா 4:18*



இலவச விநியோகத்திற்காக

இயேசு ஏட்டைச் சுருட்டி ஏவலரிடம் கொடுத்துவிட்டு, "நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" என்றார். அவர் கூறியதைக் கேட்டு அங்கிருந்தோர் வியப்புற்று, "இவர் யோசேப்பின் மகன் அல்லவா" என்றார்கள். அங்கிருந்தோர் ஆச்சரியப்பட்டதில் வியப்பு இல்லை. ஏனெனில் அத் தொழுகைக் கூடத்தில், ஏழ்மையின் நிமித்தம், அடிமைகள், குருடர், போன்றோர் பரிசேயரால் அனுமதிக்கப்படவில்லை. ஆனாலும், இயேசு தனது திருப்பணியின் முதல் உரையிலேயே ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவித்து, சிறைப்பட்டோரை, ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்யும் தன் பணியின் முக்கியதுவத்தை இயேசு உணர்த்துவதை பார்க்கிறோம்.

இயேசு அவர்களுக்குத் தெரிந்த பழமொழியைக் கூறினார். "மருத்துவரே, உம்மையே நீர் குணமாக்கிக்கொள்ளும் என்றும் கப்பர்நகூமில் செய்த கிரியை இங்கேயும் செய்யும் படி கூறுவீர்கள்'' என்று பதிலளித்து, புறசாதியினரான, சாரிபாத் விதைவை, சீரியாவின் நாகமான் இருவரையும் குறித்துப் புகழ்ந்தமை எல்லோர் கோபத்தையும் தூண்டியது. அவர்களோ இயேசுவை ஊருக்குப் புறம்பே துரத்தி மலையுச்சியிருந்து கீழே தள்ளிவிட முயன்று இயேசுவின் நற்செய்தியை நிராகரித்தார்கள்.



## நாம் கற்றுக்கொண்டவை

- உரோமைய ஆதிக்கவாதிகளின் ஒடுக்குமுறையினால் துன்புற்ற யூதருக்கு இயேசுவின் தொடக்க கால திருப்பணி ஒரு புதுத் திருப்பத்தை அளித்தது
- உரோமைய ஆட்சியாளராலும், பரிசேயர், சதுசேயர் போன்ற ஆன்மீகத் தலைவர்களாலும் ஏழைகள், இடையர், பெண்கள், சிறுவர், தொழுநோயாளர் போன்றோர் ஒதுக்கப்பட்டனர்
- இயேசு இறையாட்சியைப் பறைசாற்றவும், ஒதுக்கப்பட்டோரை விடுவிக்கவும், நோயாளரைக் குணமாக்கவும் தமது திருப்பணியை ஆரம்பித்தார்.
- திருமுழுக்கு யோவான் இயேசுவின் முன்னோடியாக அனுப்பப்பட்டு முழு வாழ்வு நோக்கிய மனமாற்றத்தை முன்வைத்தார்.
- இயேசு திருமுழுக்கு பெற்றபின் சோதிக்கப்பட்டு மூன்று சோதனைகளை மேற்கொண்டார்.
- இச்சவால்களின் போது புதுமை செய்யவோ, தன்னை வீரனெனக் காண்பிக்கவோ அல்லது தீமைக்கு அடிபணியவோ முன்வரவில்லை மாறாக கடவுளுடைய வார்த்தை மூலம் சோதனைகளை மேற்கொள்ளும் முறையை காண்பித்தார்
- இயேசு கலிலேயா தேவாலயத்தில் ஏசாயா நூலின் ஒரு பகுதியை வாசித்து திருப்பணியை ஆரம்பித்தமை நல்ல உள்ளங்களுக்கு நற்செய்தியாகவும், தீயவர்களுக்கு ஒரு அச்சுறுத்தலாகவும் அமைந்தது.



இலவச விநியோகத்திற்காக

**செயற்பாடு**

1. இயேசுவின் தொடக்ககாலத் திருப்பணியினை நாடகம் அல்லது கவிதை வடிவில் தருக.

2. ஒடுக்கு முறையில் இருந்த மக்களுக்கு இயேசுவின் திருப்பணி எப்படி அர்த்தம் அளித்தது என வேதாகமத்திலிருந்து 5 ஆதாரங்கள் தருக.

3. மாணவராகிய உமக்கு ஏற்படக்கூடிய சோதனைகளையும், அவற்றை எவ்வாறு மேற்கொள்வீர் எனவும் 10 வசனங்களில் எழுதுக.